## ஸலாதுல் க்ஹவ்ஃப் (பேரச்சமான நேரங்களின் தொழுகை)

தொழுகையின் கடமை எந்த நிலையிலும் நீங்குவதில்லை, அது ஒரு முஸ்லிம் போர்க்களத்தில் எதிரிகளுடன் போரிட்டுக்கொண்டிருந்தாலும் சரியே, அவர் தொழுகையை நிறைவேற்றுவது கட்டாயமானதாகும். இவ்விதமான காலக்கட்டங்களில் ஸலாதுல் க்ஹவ்ஃப் தொழுதுகொள்வது கட்டாயமானதாகும். இத்தொழுகையை நிறைவேற்றுவதற்கான முறை என்னவெனில், படைகளின் ஒரு பகுதியினர் பகைவர்களை எதிர்த்துப் போரிட்டுக்கொண்டிருக்கவேண்டும், மற்றவர்கள் இமாமைப் பின்பற்றி தொழுகையினை நிறைவேற்றவேண்டும். இமாம் முதல் ரகஅத்தை முடித்துவிட்டு மற்ற படைவீரர்களுக்காகக் காத்திருக்கும் வகையில் தொழுகையினைத் தொடர்வார். இமாமுக்குப் பின்னால் தொழுதுகொண்டிருந்தவர்கள்தங்களுடைய இரண்டாவது ரகஅத்தைத் தனியாகவே தொழுது முடித்துக்கொண்டு போர்முனைக்குச் செல்வார்கள், இரண்டாவது பிரிவினர் சண்டையிலிருந்து பின்வாங்கி, இமாமுக்குப் பின்னால் தொழுகையில் கலந்துகொண்டு ஒரு ரகஅத்தைத் தொழுவார்கள். இமாம் தொழுகையில் சலாம் கூறாமல் காத்துக்கொண்டிருப்பார், பின்னால் தொழுபவர்கள் தங்களுடைய இரண்டாவது ரகஅத்தையும் தொழுதுவிட்டபின் இமாம் அவர்களுடன் சேர்ந்து சலாம் கூறி தொழுகையை முடித்துக்கொள்வார். ஹஜ்ரத் சஹல் பின் க்ஹய்த்ஸமஹ் (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், படைவீரர்களில் ஒரு பிரிவினர் இறைத்தூதர் ﷺ அவர்களுக்குப் பின்னால் அணியாக நின்றார்கள், மற்ற பிரிவினர் பகைவர்களை எதிர்த்துப் போரிட்டுக்கொண்டிருந்தனர். இறைத்தூதர் ﷺ அவர்கள் முதல் பிரிவினருடன் சேர்ந்து ஒரு ரகஅத்து தொழுகையை நிறைவேற்றிவிட்டு காத்துக்கொண்டிருந்தார்கள், மக்கள் தங்களுடைய தொழுகையை முடித்துக்கொண்டு பகைவர்களை எதிர்த்துப் போரிடச் சென்றுவிட்டனர். அதன்பின் இரண்டாவது பிரிவினர் வந்து தொழுகையில் இணைந்துகொண்டனர், இறைத்தூதர் ﷺ அவர்கள் தன்னுடைய மீதியான இரண்டாவது ரகஅத்தை அவர்களுடன் சேர்ந்து தொழுதுவிட்டுக் காத்துக்கொண்டிருந்தார்கள், மக்கள் தங்களுடைய இரண்டாவது ரகஅத்தைத் தொழுது முடித்தபின் அவர்கள் ﷺ அனைவருடனும் சேர்ந்து சலாம் கூறி தொழுகையை முடித்துக்கொண்டார்கள்.(பெரும்பாலான முஹத்திஸீன்கள்)

### பிரயாணத்திலிருப்பவர்களுக்கான தொழுகை

அல்லாஹ் தஆலா பிரயாணத்திலிருப்பவர்களுக்காக தொழுகையில் சலுகைகளை அளித்துள்ளான். ஆகவே, அவர்கள் நான்கு ரகஅத்துகளுடைய தொழுகைகளை இரண்டு ரகஅத்துகளாக மட்டும் நிறைவேற்றினால் போதுமானதாகும்.

www.uzairadani.com

பிரயாணம் என்று கூறும்போது அது எவ்வளவு தூரத்திற்கானதாக இருக்க வேண்டும் என்பது நிர்ணயிக்கப்படவில்லை. பொதுவாகவே, ஒருவர் பிர யாணம் மேற்கொண்டார் எனக் கூறப்படும் நிலையினையே கருத்தில் கொள்ளப்படுகின்றது. எந்த ஒரு குடியிருப்பு அல்லது நகரத்திலிருந்து பிர யாணம் மேற்கொள்ளப்படுகின்றதோ அங்கிருந்து புறப்பட்டுச் சென்றவு டனே பிரயாணம் மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டு அவர் அதே நகரத்திற்குத் திரும்பிவரும் வரையில் அவர் பிரயாணத்தில் இருப்பதாகக் கருதப்படும். பிரயாணத்தின்போது அதனை மேற்கொண்டவர் இரண்டு தொழுகைகளை ஒன்றாகச் சேர்த்து ஜம்ஃஉ முறையிலும் தொழுதுகொள் ளலாம், உதாரணமாக, ஸ்ஜுஹர் மற்றும் அஸர் தொழுகைகள் ஒன்றாகத் தொழுதுகொள்ளலாம், அவர் விரும்பினால், ஸ்ஜுஹருடைய நேரத்தில் அஃஸர் தொழுகையையும், அஸருக்கான நேரத்தில் ஸ்ஜுஹருடைய தொழுகையைத் தாமதித்து ஒன்றாகவே தொழுதுகொள்ளலாம். இவ் வாறே, மங்க்ரிப் மற்றும் இஷா தொழுகைகளையும் ஒன்றாகவே தொழுது கொள்ளலாம். இருப்பினும், ஃபஜ்ரு தொழுகையை எவ்வகையிலும் ஜம்ஃஉ முறையில் சேர்த்துத் தொழுதுகொள்ளமுடியாது.

## நஃபிலான தொழுகைகள்

அல்லாஹ் தஆலாவுடனான அன்பு மற்றும் நெருக்கத்தைப்பெறுவதற்கான ஒரே வழி நஃபிலான தொழுகைகளாகும். ஹதீத்ஸ் ஃகுத்சி எனப்படும் ஒரு நபிமொழியில் அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

وَمَا يَزَالُ عَبْدِي يَتَقَرَّبُ إِلَيَّ بِالنَّوَافِلِ حَتَّى أُحِبَّهُ، فَإِذَا أَحْبَبْتُهُ: كُنْتُ سَمْعَهُ الَّذِي يَسْمَعُ بِهِ، وَبَصَرَهُ الَّذِي يُبْصِرُ بِهِ، وَيَدَهُ الَّتِي يَبْطِشُ بِهَا، وَرِجْلَهُ الَّتِي يَمْشِي بِهَا، وَإِنْ سَأَلَنِي لَأُعْطِيَنَّهُ، وَلَئِنِ اسْتَعَاذَنِي لَأُعِيذَنَّهُ (البخاري)

பொருள்: *என்னுடைய அடியான் தொடர்ந்து நஃபிலான தொழுகைகளின் மூலம் என் புறமாக நெருங்கிக்கொண்டிருக்கின்றான், எது வரையில் என் றால், நான் அவனையே நேசிக்க ஆரம்பித்துவிடுகின்றேன், நான் அவனை நேசிக்க ஆரம்பித்துவிடும்போது, எதனைக்கொண்டு அவன் கேட்கின் றானோ, நான் அவனுடைய செவியுறும் சக்தியாக மாறிவிடுகிறேன், எத னைக்கொண்டு அவன் பார்க்கின்றானோ நான் அவனுடைய பார்வையின் சக்தியாக மாறிவிடுகிறேன், எதனைக்கொண்டு அவன்பிடிக்கின்றானோ நான் அவனுடைய கைகளின் சக்தியாக மாறிவிடுகிறேன், எதனைக் கொண்டு அவன் நடந்து செல்கின்றானோ நான் அவனுடைய பாதங்களின் சக்தியாக மாறிவிடுகிறேன், எதையும் அவன் என்னிடம் கேட்பானேயா னால், நிச்சயம் நான் அதனை அவனுக்கு அளிக்கின்றேன், அவன் எதனைக்*

www.uzairfalahi.com

*கொண்டும் பாதுகாப்பு தேடுவானேயானால் நான் நிச்சயம் அவனுக்குப் பாதுகாப்பு அளிக்கின்றேன் (புக்ஹாரி).*

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

**اسْتَقِيمُوا، وَلَنْ تُحْصُوا، وَاعْلَمُوا أَنَّ مِنْ أَفْضَلِ أَعْمَالِكُمُ الصَّلَاةَ، وَلَا يُحَافِظُ عَلَى الْوُضُوءِ إِلَّا مُؤْمِنٌ**

பொருள்: *தொழுகைக்காக முனைப்புடன் தயாராகிவிடுங்கள், அதனைப் பற்றி ஒருபோதும் கணக்கிட்டுக்கொண்டிராதீர்கள், அறிந்துகொள்ளுங்கள், உங்களுடைய அமல்களிலெல்லாம் மிகவும் சிறந்தது தொழுகை மட்டுமே, உதூவைப் பேணிப்பாதுகாப்பது ஒரு முஃமினால் மட்டுமே இயலும் (அஹ்மத், இப்னு மாஜா, ஹாகிம்). ஹஜ்ரத் ரபீஃஅஹ் பின் கஅப் அல் அஸ்லமி (ர) அவர்கள் ஒரு முறை இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறியதாக அறிவிக்கிறார்கள்:* நீங்கள் விரும்புவதையெல்லாம் கேளுங்கள், நான் கூறினேன், எனக்கு சுவர்க்கத்தில் உங்களுடன் இருக்கும் பாக்கியத்தையே விரும்புகிறேன். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், மேலும் எதையும் கேளுங்கள், நான் கூறினேன், இது மட்டுமே போதுமானது, அவர்கள் ﷺ கூறினார்கள், உங்களுடைய நஃப்ஸை (உடலால்) அதிகமாக சுஜூதில் ஈடுபடும் பழக்கத்தையுடையதாக ஆக்கிவிடுங்கள் (முஸ்லிம்).

*நஃபிலான தொழுகை ஒரு முஃமினானவன் கடமையான (ஃபர்ஜ்தான) தொழுகைகள் அல்லாமல் கூடுதலாக நிறைவேற்றும் தொழுகைகளாகும். இவை பலவிதமானவையாகும், உதாரணமாக: ஃபர்ஜ்தான தொழுகைகளோடு சேர்ந்து நிறைவேற்றப்படும் சில நஃபிலான தொழுகைகள். அவற்றுள் சில முஅக்கதாவானவையாகவும் சில ங்கய்ரு முஅக்கதாவானவையாகவும் உள்ளன.*

www.uzairfalahi.com

* * *